## அம்பலாங்கொடை நகர சபை

## காலி மாவட்டம்

------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

-----------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 31 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 மார்ச் 31 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 31 திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

--------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அம்பலாங்கொடை நகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் காசோட்டமும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

----------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டிற்காக வீதி விளக்கு பராமரிப்புக்காக இலங்கை மின்சார சபையில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 350,000 தொகையினை கடன்பட்டோர் கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4,992,722 இற்கான வைப்புக்களை வகுத்தீடு செய்து காட்டியிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் மீதியாகக் காணப்பட்ட 33 வகையை சேர்ந்த 2247 அலகுகள் தொக்கின் பெறுமதியை கணித்து நிதிக் கூற்றுக்களில் காட்டியிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டிற்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த ரூபா 989,700 இற்கான கணனிகள் மற்றும் உதிரிப்பாகங்கள் என்பன கணனிகள் மற்றும் துணைக் கருவிகளின் கீழ் கணக்கீடு செய்யாமல் பொறியும் பொறித் தொகுதிகளின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ஊ) 2014 திசெம்பர் 19 திகதி உள்ளூராட்சி அமைச்சில் இருந்து கிடைத்திருந்த இலக்கம் LL-6406 கொண்ட பெடோன் டிரம் டிரக் வண்டியின் பெறுமதியை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(எ) உள்நாட்டுக் கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து அனுப்பியிருந்த மீதியை உறுதிப்படுத்தும் சான்றிதழின் பிரகாரம் ரூபா 11,777,837 இற்கான செலுத்த வேண்டிய வட்டியும், குப்பை முகாமைத்துவத்திற்காக பெற்றிருந்த ரூபா 12,142,439 இற்கான கடன் தொகையும், கணக்கீடு செய்திருக்கவில்லை. களி பவுஸர் வண்டி கொள்வனவு செய்வதற்காக பெற்றிருந்த கடன் தொகை ரூபா 32,392 இனால் மிகையாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) மீளாய்வாண்டிற்கான நீதி மன்றத் தண்டப் பண வருமானம் ரூபா 333,157 தொகை எனினும், நிதிக் கூற்றுக்களில் அவை ரூபா 375,000 தொகை என காட்டப்பட்டிருந்தது.

1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---------------------------------------------------------------------------------------

06 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளிடையே ரூபா 5,645,559 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது.

1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

04 வருடங்களை மிகைத்த காலம் முதல் பெற வேண்டிய கணக்கு என கணக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,527,980 இற்கான மீதி மீளாய்வாண்டின் போதும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

------------------------------------------------------------------

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 35,480,168 இற்கான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக நாளது வரை பேணப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு, பட்டோலைகள், கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள், நாளது வரை பேணப்பட்ட தொக்கு பதிவேடு மற்றும் கடன்பதிவேடு மற்றும் மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள் போன்ற சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------------------------------------

2014 பெப்ரவரி 13 திகதி நடைபெற்ற நகர விளையாட்டு விழாவில் மற்றும் 2013 திசெம்பர் 12 முதல் 15 வரையான தினங்களில் அதிகாரப் பிரதேசத்தில் வதியும் பிள்ளைகளுக்காக அப்பியாசப் புத்தகங்கள் வழங்குதல் 2014 ஏப்ரல் 01 திகதி முறையே ரூபா 306,620 உம் மற்றும் ரூபா 1,854,675 தொகை ஒன்றும் செலுத்துவதற்கு சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும் நகர சபை அதிகாரச் சட்டத்தின் உப பிரிவு 159(1)(ஊ) இன் கீழ் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் இன்றி ரூபா 271,050 உம் மற்றும் ரூபா 44,097 உம் இவ் விடயங்களுக்காக சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

2. நிதி மீளாய்வு

------------------------

2.1 நிதி விளைவு

------------------------

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் 2014 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 20,948,592 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 16,862,377 ஆகும்.

2.2 வருமான நிருவாகம்

---------------------------------

2.2.1 வீத வரி

--------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2004 ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட வருடாந்த பெறுமதி மதிப்பீட்டின் மீது வீத வரி அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜனவரி 26 திகதியில் உள்ளவாறு ரூபா 50,000 இனை மிகைத்த மீதிகள் காணப்பட்ட 26 வீத வரி அலகுகளில் இருந்து ரூபா 2,451,754 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(இ) 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 10,263,829 இற்கான நிலுவை வீத வரி மீதி ஒன்று காணப்பட்ட போதிலும் நகர சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 170(2) இன் பிரகாரம் ஆதனங்களை தடை செய்யும் செயற்பாடு கடைபிடிக்கப்பட்டு நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.2 குத்தகை

-----------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது நகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,706,846 இற்கான குத்தகை நகர சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 170(அ)1 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.3 கடை வாடகை

-------------------------

சபைக்குச் சொந்தமான கடைகளை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக 2015 ஜனவரி 28 திகதி மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) கணக்காய்வுத் திகதியில் உள்ளவாறு 106 கடைகளில் இருந்து ரூபா 1,092,541 இற்கான வாடகை நிலுவையாகக் காணப்பட்டது. அத்துடன், 44 கடைகளில் இருந்து 06 மாதங்களை விஞ்சிய நிலுவை வாடகை ரூபா 870,831 ஆகும். இந்த 44 கடைகளில் 09 கடைகள் சீல் பண்ணப்பட்டு சபைக்கு பெற்றுக்கொண்டிருந்த போதிலும் சபையினால் மீதியான 35 கடைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 5:2:11 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) சபைக்குச் சொந்தமான பஸ் நிலைய வர்த்தக தொடர் கட்டிடம் 4 கடைகளில் பொது வர்த்தக தொடர் கட்டிடம் (தரைமாடி) 5 கடைகளில் மற்றும் புது வர்த்தக கடைத் தொடர் கட்டிடத்தில் (தரை மாடி) 2 கடைகளில் வாடகை உடன்படிக்கை 05 வருடங்களை மிகைத்திருந்தன.

(iii) பொல்வத்த வர்த்தக தொடர்க் கட்டிடத்தில் கடைகள் தொடர்பாக வாடகை உடன்படிக்கை நிபந்தனை இலக்கம் 06 மற்றும் 07 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) அம்பலாங்கொடை நகர சபை பொது விளையாட்டு திடலிற்கு முன்னால் காணப்பட்ட நகர சபையின் சிற்றுண்டிச் சாலைகள் வாடகையாளர் மூவரிடமிருந்து கணக்காய்வுத் திகதி வரை ரூபா 94,460 இற்கான வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.2.4 அனுமதிப் பத்திரக் கட்டணம்

---------------------------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது நகர சபைக்கு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 129,163 இற்கான அனுமதிப்பத்திரக் கட்டணத்தை நகர சபை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 170(அ)1 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

2.2.5 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக கட்டணம்

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நீதி மன்றத் தண்டப் பணம் ரூபா 302,201 உம் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 48,043,398 உம் கிடைக்க வேண்டியிருந்தது.

3. செயற்பாட்டு மீளாய்வு

-------------------------------------

3.1 பயன்படுத்தப்படாத சொத்துக்கள்

---------------------------------------------------------

2013 ஜூன் 05 திகதிய இலக்கம் : PCMD/PR/2013 கொண்ட ஜனாதிபதி செயலாளரின் சுற்று நிருபத்தின் பிரகாரம் அரச நிறுவனங்களில் பயன்படுத்தப்படாத அழிவடையும் நிலையில் காணப்படும் பழைய வாகனங்கள் மற்றும் பொறியும் பொறித் தொகுதியும் 2013 செப்டம்பர் 05 திகதி அளவில் அகற்றுவதற்கான செயற்பாடு ஒன்றினை தயாரிக்கும் படி அறிவித்திருந்த போதிலும், சபை வளவில் முச்சக்கர வண்டி ஒன்று, டிரக்டர் வண்டி மற்றும் ஹாடிமெக் டிரக்டர் ஒன்று கணக்காய்வுத் திகதியாகிய 2015 ஜனவரி 28 திகதி வரை அகற்றப்படாமல் துருப்பிடித்த நிலையில் காணப்பட்டது.

4. கணக்களிப் பொறுப்பும் நள்ளாளுமையும்

---------------------------------------------------------------------

பாதீட்டுக் கட்டுப்பாடு

-------------------------------------

பாதீட்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானத்திடையே முரண்கள் காணப்பட்டதுடன், சில செலவு விடயங்களில் சேமிப்பு காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிருவாகம்

(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்